# தொகுத்தறி மதிப்பீடு – பருவம் – 3
## தமிழ் – 2023 – 24
## வகுப்பு – 5

பெயர் : ______________ மதிப்பெண் : 60

பிரிவு : ______________ நேரம் : 2 மணி

1. அட்டவணையில் உள்ளவற்றைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 2× 2 = 4

| | | | |
|---|---|---|---|
| வனப்பு | வல்வில்ஓரி | தரணி | திண்மை |
| சிபி மன்னன் | பார் | அறிஞர்கள் | பாரம்பரியம் |

அ) 'உலகம்' என்ற சொல்லின் வேறு பெயர்கள் ______________, ______________

ஆ) கடையேழு வள்ளல்களில் ஒருவர் ______________;

புறாவிற்காகத் தன் உடலையே தந்த மன்னன் ______________

2. சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. 1× 6 = 6

(வழி, பனி, காலை, பணி, காளை, வலி)

மார்கழி மாத ______________ யையும் பொருட்படுத்தாத உழவர், ______________ யில் எழுந்து ______________ யை ஓட்டிக்கொண்டு வயலுக்கு விரைந்துசென்றார். செல்லும் ______________ யில் கல்லில் மோதியதால் காலில் ______________ ஏற்பட்டது. ______________ முடித்துத் திரும்பும்போது மருத்துவரிடம் சென்றார்.

3. சொல்லுக்குரிய பொருளைத் தேர்ந்தெடுத்து நிழலிடுக. 2× 2 = 4

அ) பண்

கண் ○ இசை ○ மண் ○

ஆ) சன்மானம்

சம்பளம் ○ சந்தனம் ○ வெகுமதி ○

4. விடைக்கேற்ற வினாக்களை உருவாக்குக. 3× 2 = 6

யாழினி மிதிவண்டியில் தோட்டத்திற்குச் சென்றாள்; பூக்களைப் பறித்து, பூமாலை தொடுத்தாள்.

அ) ______________? (யார்)

ஆ) ______________? (எங்கு)

இ) ______________? (எதற்காக)



www.Padasalai.Net
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com
CamScanner

5. அறிவிப்பைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 3 × 2 = 6

**அஞ்சல்துறை அறிவிப்பு**

**"காந்தி பிறந்தநாளை முன்னிட்டு, அனைத்து வயதினரும் பங்கேற்கும்வகையில் கட்டுரை எழுதும் போட்டி"**

15.08.2024 க்குள் அருகில் உள்ள அஞ்சலகத்தில் கட்டுரையைச் சேர்த்தல் வேண்டும்.

முதல் பரிசு ₹ 50,000 | இரண்டாம் பரிசு ₹ 25,000 | மூன்றாம் பரிசு ₹ 10,000

அ) நீங்கள் இப்போட்டியில் கலந்து கொண்டால், எதைப் பற்றி கட்டுரை எழுதுவீர்கள்?

______________________________.

ஆ) கட்டுரை சேர வேண்டிய இடம்: ____________________.

இ) உன் வீட்டில் இருந்து எத்தனை பேர் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியும்?

______________________________

6. சொற்களை முறைப்படுத்தித் தொடர்களை எழுதுக. 2 × 2 = 4

அ) ஊர்த்தலைவர் / பூவண்ணனே / தகுதியானவர் / நிருவாகியாகத் / என்றார்

______________________________

ஆ) மகிழ்ந்து / முடிவை / மக்கள் / ஏற்றனர் / ஊர்த்தலைவரின்

______________________________

7. தொடரில் உள்ள இணைச்சொற்களை எடுத்து எழுதுக. 1 × 4 = 4

விவசாயி கண்ணும்கருத்துமாக இரவுபகல் பாராமல் செய்த ஈடுஇணையற்ற உழைப்பால், வயல் பச்சைப்பசேல் எனக் காட்சி அளித்தது.

நேரிணை – _____________, _____________

எதிரிணை – ____________________

செறிவிணை – ____________________



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com
CS CamScanner

8. விண்ணப்பக் கடிதத்தின் பகுதியை நிறைவு செய்க. 1× 6 = 6

(பூங்கா அமைத்துத்தரக் கோரி ஊராட்சி மன்றத்தலைவருக்கு ஊர்மக்கள் சார்பில் விண்ணப்பக் கடிதம்)

மதிப்பிற்குரிய ______________________,

பொருள்: ______________________

வணக்கம், ______________________ மாவட்டம்,

______________________ கிராமத்தில் வாழும் மக்களாகிய எங்களுக்கு


______________________

______________________

______________________ விரைவில் பூங்கா அமைத்துத்தர வேண்டுகிறோம். நன்றி.

9. வரைபடத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடையளிக்க. 3× 2 = 6

அறிவுமதி, வெள்ளிக்கிழமை நூலகம் விடுமுறை என்பதால், முந்தைய நாள் அண்ணா நூலகத்திற்குச் சென்றாள். அங்கு அவள் படித்த புத்தகங்களின் பெயர்களும் அவற்றின் பக்கங்களின் எண்ணிக்கைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.




அ) அதிக அளவு பக்கங்கள் படிக்கப்பட்ட புத்தகத்தின் பெயர்

______________________

ஆ) அறிவுமதி நூலகம் சென்ற கிழமை எது?

______________________

இ) அறிவுமதி, சிலப்பதிகார நூலில் படித்த பக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

______________________



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com

10. **குறிப்புகளைக் கொண்டு கதையை உருவாக்கி எழுதுக.** 1× 4 = 4

குளம்– மீன்கள்– நண்டுகள்– நண்பர்கள் – மழை– வெள்ளம்– வெள்ளத்தில் துணி அடித்துவரப்படுதல்– அத்துணி குளத்தை அடைதல் – மீன்கள் மாட்டிக் கொள்ளல் – நண்டுகள் காப்பாற்றுதல் – மீன்கள் மகிழ்ச்சி

11. **பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 2× 3 = 6

சிறுபஞ்சமூலம் என்னும் நூல், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் மொத்தம் நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. ஐந்து மூலிகைகளின் வேர் என்பது இதன் பொருள் ஆகும். மூலம் என்பதற்கு வேர் என்பது பொருள். அவை கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியவற்றின் வேர்கள் ஆகும். இவ்வேர்கள் உடல்நோயைத் தீர்க்கின்றன. அதுபோல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்படும் ஐந்து கருத்துகள், மக்கள் மனநோயைத் தீர்ப்பனவாக உள்ளன.

அ) பொருந்தாத தொடர் எது? ( ) குறியிடுக.

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ◯
- ஒவ்வொரு பாடலிலும் ஏழு கருத்துகளைக் கொண்ட நூல் சிறுபஞ்சமூலம். ◯
- மக்களை நெறிப்படுத்தக்கூடிய கருத்துகளைக் கொண்டது சிறுபஞ்சமூலம். ◯

ஆ) சிறுபஞ்சமூலம் இதில் அடிக்கோடிட்ட சொல் உணர்த்தும் மூலிகைகள் யாவை?

12. **'சிறுசேமிப்பு' என்னும் தலைப்பிலான கட்டுரைக்குப் பொருந்துமாறு நான்கு தொடர்களை எழுதுக.** 1× 4 = 4



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com
CamScanner